# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **23 ஜூன் 2019** | **இயேசுவின் திருவுடல் திருஇரத்தம் பெருவிழா** | **மூன்றாம் ஆண்டு** |



## உங்கள் சிந்தனைக்கு...

இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே! இயேசுவின் திருவுடல் திரு இரத்தம் பெருவிழா ஞாயிறைக் கொண்டாட நம் ஆலயத்தில் கூடியிருக்கும் இறைமக்களாகிய உங்களை இயேசுவின் நாமத்தில் வரவேற்கின்றோம்.

சக்கேயு தன்னிடம் மிகுதியாக உள்ளதைக் கொடுத்தான். ஏழைக் கைம்பெண்ணோ தன்னிடம் உள்ள அனைத்தையும் கொடுத்தாள். இயேசுவோ தன்னிடம் உள்ளதையும் கொடுத்து ஏன் தன்னையும் பகிர்ந்து கொடுத்தார். மனிதக் குலத்தைத் தனியாய் விட்டுச் செல்ல மனமில்லாதவராய், இதோ! உலக முடிவுவரை நான் உங்களோடு இருக்கிறேன் என்று வாக்களித்த இயேசு, தன்னை அப்பத்திலும் இரசத்திலும் வெளிப்படுத்தியுள்ளார். மானிட சமூகத்தின் மீது கொண்ட அன்பின், உறவின், பகிர்வின் உச்சகட்டமே இயேசு தன்னேயே கொடுத்த நிகழ்வாகும். நற்கருணை நம்மைக் கிறிஸ்துவோடு மட்டுமல்ல, உறவின் அடிப்படையில் நம் அனைவரையும் இணைக்கிறது. அப்பம் ஒன்றே ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கின்றோம். எனென்றால் நாம் அனைவரும் ஒரே அப்பத்தில் தான் பங்கு பெறுகிறோம்.

பாலைவனத்தில் மன்னாவை உணவாகக் கொடுத்த இறைவன் பரிசுத்த திருச்சபைக்கு இயேசுவின் திருவுடல் திருஇரத்தத்தை வாழ்வளிக்கும் உணவாகக் கொடுத்தார். கொடுக்கும் போதும் பகிரும் போதும், கொடுப்பவனும் பெறுபவனும் மனநிறைவுப் பெறுகின்றனர். அந்த நிறைவில் மகிழ்வைத் தேட இறைவன் நம்மை இன்று அழைக்கின்றார். இதனை உணர்ந்துத் திருப்பலிக் கொண்டாடங்களில் உள்ளார்ந்த விதத்தில் பங்கு கொள்வோம்.

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு

அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வருகின்ற ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக “Church of Our Lady of Lourdes” என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் “Building Fund” என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.



## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்




பள்ளி விடுமுறை காரணமாக இவ்வாரம் தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறாது. மீண்டும் தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள், 07-07-2019 முதல் ஆரம்பமாகும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

**13-07-2019 சனிக்கிழமை, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**




இரவு முழுதும் விழித்திருந்து, இறைவனின் அன்பை சுவைக்கவும், அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாடவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்



**சனிக்கிழமைகளில்** இரவு 8:30 மணிக்குத் தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்வியநற்கருணை ஆசீரும் நடைபெறும். நம் அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெறவும், திவ்விய நற்கருணையில் இறைப்பிரசன்னம் காணவும் அனைவரும் வருக!



## நற்கருணை ஆராதனை வழிபாடு

**07-07-2019 ஞாயிறு மாலை 5:00 மணி**

திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக் கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காகவும் செபிக்கவும் உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## குருக்களுக்கான ஆண்டு தியானம் - 2019




அன்பார்ந்தவர்களே! நமது சிங்கப்பூர் உயர் மறைமாவட்டக் குருக்களுக்கான ஆண்டுத் தியானம், வருகின்ற ஜூலை 1 முதல் 5 வரை (திங்கள் முதல் வெள்ளி) இடம்பெறவுள்ளதால், இந்த நாட்களில் திருப்பலி நடைபெறாது என்பதை அன்புடன் அறியத்தருகிறோம்.

அதற்குப் பதிலாக, நமது ஆலயத்தில் மதியம் 12:30 மணிக்கும் மாலை 6:30 மணிக்கும் நற்கருணை வழங்கும் நிகழ்வு இடம்பெறும் என்பதைக் கவனத்தில் கொள்க!

நம் குருக்களுக்காக ஜெபியுங்கள்.

“சிலுவையில் தொங்கும் இயேசுவைப் பார்க்கும் போது, இயேசு எந்தளவுக்கு நம்மை அன்பு செய்தார் என்பதை அறியலாம். நற்கருணைப் பிரசன்னத்தைப் பார்க்கும் போது, இயேசு இன்றும் எத்துணை நம்மை அன்பு செய்து கொண்டிருக்கிறார் என்பதை உணர முடியும்”

- புனித அன்னை தெரேசா -

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | தொடக்க நூல் 14:18-20 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 110: 1. 2. 3. 4 |
| **பதிலுரை:** | மெல்கிசெதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே. |
| **இரண்டாம் வாசகம்:** | 1 கொரிந்தியர் 11:23-26 |
| **வாழ்த்தொலி:** | அல்லேலூயா, அல்லேலூயா! விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா. |
| **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 9:11-17 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

